NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 21 July 2015

# சிங்கப்பூர் மாதிரி நாடாளுமன்றத்தின் ‘முதலாவது பெண் பிரதமர்’ பிரெமிக்கா

சிங்கப்பூர் மாதிரி நாடாளுமன்றம் மூலம் நாட்டுக்கு ‘முதலாவது பெண் பிரதமர்’ கிடைத்துள்ளார். அவர்தான் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக (என்யுஎஸ்) யோங் லூ லின் மருத்துவப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு பயிலும் குமாரி பிரெமிக்கா மாடசாமி (படம்).



நேற்றுக் காலை ஆர்ட்ஸ் ஹவுஸில் தொடங்கிய 4வது மாதிரி நாடாளுமன்றத்தில், பிரெமிக்கா பிரதமர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற நாடாளுமன்ற நாயகர் திருவாட்டி ஹலிமா யாக்கோப், நாடாளுமன்றத்தின் விதிமுறைகள், நடைமுறைகள் பற்றிப் பேசினார்.

சிங்கப்பூரின் நாடாளுமன்ற முறையின் அடிப்படை அம்சங்களை இளையர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தில் இந்த, சிங்கப்பூர் மாதிரி நாடாளுமன்றத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு முன் தொடங்கப் பட்டது.

பல்கலைக்கழகங்கள், பலதுறை தொழிற் கல்லூரிகள் ஆகியவற்றின் மாணவர்கள் ஆளும் கட்சி மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பொறுப்பேற்று, நாட்டு விவகாரங்கள் பற்றி விவாதிப்பார்கள்.

மாதிரி நாடாளுமன்றத்தின் பிரதமராக ஒரு பெண் பொறுப்பேற்றது இதுதான் முதல் முறை. மற்றோர் புதிய அம்சமாக மாணவர்களே உள்ளூர், வெளிநாட்டுச் செய்தியாளர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மூன்று நாள் நடைபெறும் மாதிரி நாடாளுமன்றத்தில் 90 மாணவர்கள் பங்கேற்கின்றனர். அரசாங்க கருத்து சேகரிக்கும் அமைப்பான ‘ரீச்’சின் என்யுஎஸ் இளையர் தூதுவர்கள், என்யுஎஸ் அரசியல் அறிவியல் சங்கம், என்யுஎஸ் சட்டத்துறையின் இலவச சட்ட உதவிச் சங்கம் ஆகியவை இந்நிகழ்ச்சிக்குக் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்ச்சி பற்றி கருத்துரைத்த என்யுஎஸ் அரசியல் அறிவியல் சங்கத்தின் தலைவர் திரு கிறிஸ் சியா, 24, “மாதிரி நாடாளுமன்றத்தின் பிரதமராகச் செயலாற்றுவது சவால் மிக்கது. இந்தப் ‘பிரதமர்’ இதர உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் பணியாற்ற ஒருங்கிணைக்க வேண்டும்.

“தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றி தெளிவாகப் புரிந்து வைத்திருக்கும் பிரெமிக்கா, சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் வெளிப்படுத்தியுள்ளார்,” என்றார்.

‘பிரதமராக’ பொறுப்பேற்றது குறித்து தமிழ் முரசிடம் பேசிய 19 வயது குமாரி பிரெமிக்கா, “பிரதமர் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால், அது எவ்வளவு உளைச்சல் மிக்கது என்பதை நான் புரிந்து கொண்டேன்.

இதில் அனுபவம் பெற்ற சட்டத்துறை, அரசியல் துறை மாணவர்கள் மத்தியில் மருத்துவ மாணவியான நான் அவர்கள் விடுத்த கேள்விக்கணைகளுக்கு தகுந்த பதிலளித்தேன்,” என்றார்.

வரும் வியாழன், ஞாயிறு ஆகிய மேலும் இரு தினங்களுக்கு மாதிரி நாடாளுமன்றம் நடைபெறும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.